DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 112/2015

Deposition of witness for L.W. 12/P.W. 4

| | | | |
|---|---|---|---|
| Name | : மாதேஸ்வரன் | Caste | : |
| Father/Husband Name | : கந்தசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 04-01-2023

முதல் விசாரணை

1) நான் தற்போது காடச்சநல்லூரில் குடியிருந்துகொண்டு கம்பி கட்டும் தொழில் செய்து வருகிறேன்.

2) எனக்கு படிப்பறிவு இல்லை. காடச்சநல்லூர் அருகேயுள்ள வங்கியில் எனக்கு கணக்கு உள்ளது. ATM கார்டும் கொடுத்தனர். எனக்கு பயன்படுத்த தெரியாது என்பதால் எனது மகன் ஜீவானந்தத்திடம் கொடுத்திருந்தேன். எனது மகன் எக்ஸெல் கல்லூரியில் படிக்கிறார். எனது மகனின் நண்பனின் அப்பாவிற்கு உடம்பு சரியில்லை எனவும் பணம் போட்டால் அவர் எடுத்துக்கொள்வதற்காக ATM வேண்டுமென கேட்டதாகவும் எனது மகன் கொடுத்ததாகவும் கூறினார்.

3) கருங்கல்பாளையம் போலீசார் ATM கார்டு யாருடையது என கேட்டார்கள். என்னுடையது எனவும், எனது மகனிடம் கொடுத்து வைத்திருப்பதாகவும் கூறினேன். பணத்தை நிறைய எடுத்துள்ளதாக போலீசார் கூறினர். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியிருந்தபோதும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 112/2015

Deposition of witness for L.W. 13/P.W. 5

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜீவானந்தம் | Caste | : |
| Father/Husband Name | : மாதேஸ்வரன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 04-01-2023

முதல் விசாரணை

1) நான் தற்போது காடச்சநல்லூரில் குடியிருந்துகொண்டு டிப்ளமோ முடித்துவிட்டு எனது தகப்பனாருடன் சென்டரிங் வேலை பார்த்து வருகிறேன்.

2) அ.சா. 4 மாதேஸ்வரன் எனது தகப்பனார். நான் டிப்ளமோ 3 வது ஆண்டு படித்து வந்தபோது எனது நண்பர் ஆனந்தராஜ் அவருடைய தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லை எனவும் அதற்காக என்னிடம் ATM வேண்டும் என கேட்டார். நான் எனது தகப்பனாரின் ATM ஐ அவரிடம் கொடுத்தேன். அது SBI வங்கியின் கார்டு ஆகும். கணக்கு எண் மறந்துவிட்டது.

3) ஆனந்தராஜின் தகப்பனார் 2 நாளில் டிஸ்சார்ஜ் ஆகிவிடுவதாகவும் உடனடியாக ATM கொடுத்துவிடுவதாக கூறினார். ஆனால் கொடுக்கவில்லை. அதற்குள் செமஸ்டர் லீவும் வந்துவிட்டது. எனது தகப்பனாருக்கு போன் வந்தது. அதில் கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் இருந்து தொடர்பு கொண்டு என்ன வேலை செய்கிறீர்கள் என கேட்டார்கள். சென்டரிங் வேலை செய்வதாக கூறினார். இவ்வளவு பணம் ஏன் எடுத்துள்ளீர்கள் என கேட்டனர். தெரியவில்லை என கூறிவிட்டு அவரது மகனான என்னிடம் கொடுத்ததாக கூறினார். போலீசார் என்னை விசாரித்தனர். ஆனந்தராஜீடம் கொடுத்ததாக நான் தெரிவித்தேன்.

4) ஆனந்தராஜ் யாரிடம் அந்த ATM கொடுத்தார் என்பது எனக்கு தெரியவில்லை. ATM மில் இருந்து பணம் எடுத்தது குறித்து எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியிருந்தபோதும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.